


**08. 11. 2025**

## தலைப்புச் செய்திகள்

1. குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, 6 நாள் அரசு முறை பயணமாக அங்கோலா, போட்ஸ்வானா நாடுகளுக்கு இன்று புறப்படுகிறார்.

2. நாட்டில் அடுத்த தலைமுறையினருக்கான மேம்பட்ட ரயில் சேவைகளை வந்தே பாரத், நமோ பாரத் அம்ரித் பாரத் ரயில்கள் வழங்குவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

3. நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் அடுத்த மாதம் ஒன்றாம் தேதி தொடங்கும் என்று மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு அறிவித்துள்ளார்.

4. நாகூர் ஆண்டவர் கந்தூரி விழாவிற்காக மாநில அரசின் சார்பில் 45 கிலோ சந்தன கட்டைகள் வழங்கப்படும் என்று சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு.நாசர் கூறியுள்ளார்.

5. பிரிஸ்பேனில் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான 5-வது இறுதி 20-20 கிரிக்கெட் போட்டியில் இந்தியா முதலில் பேட் செய்கிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖

குடியரசு தலைவர்

குடியரசு தலைவர் திருமதி திரெளபதி முர்மு 6 நாள் பயணமாக அங்கோலா, போட்ஸ்வானா நாடுகளுக்கு நாடுகளுக்கு இன்று புறப்பட்டார்.

தமது பயணத்தின் ஒருபகுதியாக இவ்விரு நாடுகளின் அதிபர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை அவர் மேற்கொள்கிறார்.

அந்நாடுகளின் நாடளுமன்றத்தில் உரையாற்ற உள்ள குடியரசு தலைவர், அங்குள்ள இந்திய சமூகத்தினருடனும் கலந்துரையாடுகிறார்.

குடியரசு தலைவரின் ஆப்பிரிக்க நாட்டு பயணம் தென்னாடுகள் உடனான அந்நாடுகளின் நட்புறவை மேலும் வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

❖❖❖❖❖❖❖

பிரதமர் - வந்தே பாரத்

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உள்கட்டமைப்பு மேம்படுவதன் அவசியத்தை பிரதமர் திரு.நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

உத்தரபிரதேச மாநிலம் வாரணாசியில் 4 புதிய வந்தே பாரத் ரயில் சேவைகளை இன்று துவக்கிவைத்து பேசியஅவர், மேம்பட்ட சாலை, ரயில், போக்குவரத்து வசதிகளால் விரைவான வளர்ச்சி கண்டுவரும் நாடாக இந்தியா திகழ்வதாக கூறினார்.

நாட்டில் அடுத்த தலைமுறையினருக்கான மேம்பாட்ட ரயில் சேவைகளை வந்தே பாரத், நமோ பாரத் அம்ரித் பாரத் ரயில்கள் வழங்குவதாக குறிப்பிட்டார்

ரயில்வே துறையின் சீர்த்திருத்தங்கள் வெளிநாட்டு பயணிகளையும் வெகுவாக கவர்ந்துள்ளதாக பெருமிதம் தெரிவித்தார்.

வளர்ந்த நாடுகளில் கட்டமைப்பு மேம்பாடே அந்நாடுகளின் பொருளாதார மேம்பாட்டிற்கு வழிகோலியதாகவும் குறிப்பிட்டார்.

இன்று தொடங்கப்பட்ட 4 ரயில் போக்குவரத்து சேவைகளோடு நாட்டில் இயங்கும் வந்தேபாரத் ரயில்களின் எண்ணிக்கை 160 ஆக உயர்ந்துள்ளது என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்வின் ஒருபகுதியாக பிரதமர் பெனாரஸ் கஜுரகோ வந்தே பாரத் ரயிலில் பயணித்த சிறுவர்களுடன் கலந்துரையாடினார்.

இந்நிகழ்வில் ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இதனிடையே பிரதமர் துவக்கி வைத்த எர்ணாகுளம் - பெங்களுரு இடையேயான வந்தே பாரத் ரயில் இன்று கோவை ரயில் நிலையம் வந்தபோது கல்லூரி மாணாக்கர், தொழில்துறையினர், பாரதிய ஜனதா கட்சியினர் உள்ளிட்ட அனைவரும் உற்சாக வரவேற்பளித்தனர்.

இதனொரு பகுதியாக கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

இந்த ரயில் சேவை அனைத்து தரப்பு மக்களுக்கும் மிகவும் பயனளிக்கும் என்று சேலம் கோட்ட ரயில்வே மேலாளர் திரு. பன்னாலால் தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திரமோடி, சட்ட சேவைகள் நடைமுறைகளை வலுப்படுத்தும் தேசிய மாநாட்டை உச்சநீதி மன்றத்தில் இன்று மாலை துவக்கி வைத்து உரையாற்றுகிறார்

சட்டசேவை கட்டமைப்பு குறித்த பல்வேறு அம்சங்கள் குறித்து இம்மாநாட்டில் விவாதிக்கப்படுகின்றன.

❖❖❖❖❖❖❖

குளிர்கால கூட்டத்தொடர்

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் அடுத்த மாதம் ஒன்றாம் தேதி தொடங்கவுள்ளதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜுஜு அறிவித்துள்ளார்.

அடுத்தமாதம் 19-ம் தேதிவரை இக்கூட்டத்தொடர் நடைபெறும் என்று கூறியுள்ள அவர், இந்த கூட்டத்தொடர் ஆக்கப்பூர்வமாக நடைபெறும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களின் விருப்பங்களை நிறைவேற்றும் வகையிலும், ஜனநாயகத்தை வலுப்படுத்தும் வகையிலும் குளிர்கால கூட்டத்தொடரை ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாக திரு. கிரண் ரிஜுஜு தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖

பீஹார் பிரச்சாரம்

பீஹார் மாநிலத்தில் 122 சட்டப் பேரவை தொகுதிகளுக்கு 2-ம் கட்டமாக வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறும் வாக்குப் பதிவிற்கான பிரச்சாரம் நாளை மறுநாள் முடிவடைவதால் அரசியல் கட்சி தலைவர்கள் உச்சக்கட்ட பரப்புரையில் ஈடுபட்டுள்ளனர்.

பி.ஜே.பி. மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திரமோடி சீதாமாரியில் தேர்தல் பொதுக் கூட்டத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டினார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் திருமதி. பிரியங்கா காந்தி கத்திஹார் மாவட்டத்தில் அக்கட்சி வேட்பாளர்களுக்கு வாக்கு சேகரித்தார்.

❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் 2 நாள் பயணமாக நாளை இரவு திருச்சி வருகிறார்.

திருச்சி மாவட்டத்தில் 223 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைக்கும் அவர், களமாவூரில் நடைபெறும் அரசு விழாவில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு 348 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் 201 கோடி ரூபாய் மதிப்பில் புதிய பணிகளுக்கும் அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

❖❖❖❖❖❖❖

நாசர்

தமிழ்நாட்டில் இஸ்லாமியர்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் வழிபாட்டு தலங்களின் சீரமைப்பு பணிகள் முனைப்புடன் மேற்கொள்ளப்படுவதாக மாநில சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு. நாசர் தெரிவித்துள்ளார்.

நாகூர் ஆண்டவர் கந்தூரி விழா வரும் 21-ம் தேதி நடைபெறுவதை ஒட்டி இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை ஆய்வுசெய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கந்தூரி விழாவிற்காக 45 கிலோ சந்தன கட்டைகள் அரசு சார்பில் வழங்கப்படும் என்றார்.

நாகூர் தர்கா சீரமைப்பு பணிகள் 2 கோடி ரூபாய் மதிப்பில் நடைபெறுவதாக கூறியஅவர், தற்போது சாலை மேம்பாட்டு பணிகளுக்காக 40 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப் படுவதாக குறிப்பிட்டார்.

விழாக்காலத்தில் பொதுமக்களின் வசதிக்காக 60 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி, ஆட்சித்தலைவர் திரு. ஆகாஷ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

❖❖❖❖❖❖❖

வாக்காளர் பட்டியல்

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் முனைப்புடன் மேறகொள்ளப்பட்டு வருகின்றன.

நெல்லை மாவட்டத்தில் இப்பணிகளுக்காக இதுவரை 7 லட்சம் விண்ணப்பங்கள் விநியோகிக்கப் பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.சுகுமார் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக ஆய்வு மேற்கொண்ட அவர், மாவட்டத்தில் விடுபட்ட மேலும் 5 லட்சம் பேருக்கு நாளை மறுநாளுக்குள் விண்ணப்பங்கள் வழங்கப்படும் என்றும் கூறினார்.

❖❖❖❖❖❖❖

தண்ணீர் திறப்பு வாய்ஸ்

மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்ட பாசனத்திற்காக வைகை அணையிலிருந்து இன்று தண்ணீர் திறக்கப்பட்டதாக எமது தேனி செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

நெல்லை – வாய்ஸ்

நெல்லை தாமிரபரணி ஆற்றில் பிற உயிரினங்களுக்கு நன்மை பயக்கும் வகையில் இரண்டு லட்சம் மீன் குஞ்சுகள் விடப்படுவதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சுகுமார் தெரிவித்துள்ளார்.

... வாய்ஸ் ...

❖❖❖❖❖❖❖

படகு சேவை

சபரிமலை சீசன் தொடங்கவுள்ளதால் கன்னியாகுமரி கடலில் அமைந்தள்ள விவேகானந்தர் மண்டபத்திற்கு படகு போக்குவரத்து சேவை ஒரு மணி நேரம் நீட்டிக்கப் பட்டுள்ளது.

சுற்றுலா பயணிகளின் வசதிக்காக ஆன்லை டிக்கெட் முன்பதிவு முறையும் அதிகரிக்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

திருச்செந்தூர் வாய்ஸ்

திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோவில் கடற்கரை பகுதியில் இரவு 10 மணி முதல்

அதிகாலை 4 மணிவரை பக்தர்கள் தங்க இன்றுமுதல் தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

மதுராந்தகம் ஏரி

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் ஏரி முழு கொள்ளளவை எட்டவுள்ள நிலையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஏரிக்கு வரும் 300 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

கிளி ஆற்றில் இந்த தண்ணீர் விடப்படுவதால் அதற்குட்பட்ட கத்தரி சேரி, முருக்கம்பாக்கம், வளர்பிறை, முன்னுத்தி குப்பம், விழுதமங்கலம் பகுதி விவசாயிகள் பயன்பெறுவர்.

இந்த தண்ணீர் கால்வாய் வழியாக கடலில் கலக்கும் என்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

❖❖❖❖❖❖❖

இருவரி

தமிழ்வளர்த்த இத்தாலிய பேரறிஞர் வீரமாமுனிவரின் 345 –வது பிறந்தநாளை முன்னிட்டு தூத்துக்குடி மாவட்டம் காமநாயக்கன்பட்டியில் உள்ள அவரது மணிமண்டபத்தில் மாநில சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. கீதாஜீவன் தலைமையில் மரியாதை செலுத்தப்பட்டது.

தமிழகத்தில் 2ம் நிலை காவலர் பணியிடங்களுக்கு நாளை எழுத்துத்தேர்வு நடைபெறுகிறது.

காலியாக உள்ள 3 ஆயிரத்து 655 பணியிடங்களை நிரப்புவதற்கான இத்தேர்வில் மாநிலம் முழுவதும் 2 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்கின்றனர்.

முறைக்கேட்டை தடுக்க முதல்முறையாக இந்த தேர்வில் விண்ணப்பதாரரின் கைவிரல் ரேகை பதிவு கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர் பேட்டையில் தொழில் பழகுனர் பயிற்சி சேர்க்கை முகாம் நாளைமறுநாள் நடைபெறவுள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

கனரக வாகன தொழிற்சாலை மற்றும் சிறு குறு நடுத்தர தொழில் முன்னணி நிறுவனங்கள் பங்கேற்கும் இம்முகாமில் தேர்ந்தெடுக்கப் படுபவர்களுக்கு 12 ஆயிரம் ரூபாய் வரை மாதாந்திர உதவித்தொகையுடன் சான்றிதழ் பயிற்சியும் வழங்கப்படும் என்றார்.

❖❖❖❖❖❖❖

வானிலை

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி தூத்துக்குடி மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

திருநெல்வேலி, தென்காசி மாவட்ட மலைப் பகுதிகளிலும், கன்னியாகுமரி மாவட்டத்தின் ஓரிரு இடங்களிலும் நாளை கனமழை பெய்யக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

பிரிஸ்பேனில் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான 5-வது இறுதி 20-20 கிரிக்கெட் போட்டியில் முதலில் பேட் செய்யும் இந்தியா சற்றுமுன் 2 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 19 ரன் எடுத்துள்ளது.

முன்னதாக டாஸ் வென்ற ஆஸ்திரேலியா பந்துவீச தீர்மானித்தது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இந்தியா தற்போது 2-1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖